**7.3.2015**

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அறிவியல் ஒளிச்சேர்க்கை!**

இந்த ஆண்டினை (2015) "பன்னாட்டு ஒளி ஆண்டு' என்று "யுனெஸ்கோ' அறிவித்து இருக்கிறது. இந்த ஆண்டில் 1001 ஒளியியல் கண்டுபிடிப்புகள் குறித்தும், அல் ஹசன் என்று அழைக்கப்படும் பின்-அல்-ஹாயத் என்னும் அராபிய இயற்பியல் அறிஞரின் "ஒளி நூல்' ("கிதாப் அல்-மனாஸிர்') என்னும் அறிவியல் புத்தகம் குறித்தும் அறிமுகக் கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன. அறிவியலுக்குச் சாதி இல்லை மதமும் இல்லை என்ற கருத்தினை வலியுறுத்தும் வகையில் இந்தப் பன்னாட்டு ஒளி ஆண்டில் செப்டம்பர் 14 அன்று "அறிவு அடிப்படைச் சமூகத்திற்கு இஸ்லாமியப் பொற்காலம்' என்ற தலைப்பில் கண்காட்சிகளும் மாநாடுகளும் நடைபெற உள்ளன. இயற்பியலுக்கு நோபல் பரிசு பெற்ற இந்தியர்கள் மூவரில் சர். சி.வி. ராமன், டாக்டர் சுப்பிரமணியம் சந்திரசேகர், இருவருமே ஒளி சார்ந்த ஆய்வுகளால் புகழ் பெற்ற தமிழர்கள் என்பது பெருமைக்கு உரிய செய்தி. பிரிட்டிஷ் இந்தியாவில் வாழ்ந்து பரிசு பெற்ற ஒரே அறிஞர் சர். சி.வி. ராமன் (1930). நோபல் பரிசளிப்பு விழாவில் தமது நாட்டிற்கெனத் தேசியக் கொடி இல்லையே என்று கண்கலங்கியவர். இவரது சகோதரியின் புதல்வரான டாக்டர் சுப்பிரமணியம் சந்திரசேகர், இயற்பியலுக்கான நோபல் பரிசைப் பெற்ற (1983) மூன்றாவது இந்தியர். சூரியனைப் போல் ஏறத்தாழ 8 மடங்கு வரை நிறை கொண்ட கனத்த விண்மீன்கள் "சூப்பர்நோவா' (மிகைப் புது விண்மீன்) ஆக வெடித்துச் சிதறினால் "வெண்குறளை' விண்மீன் மிஞ்சும். அது ஏறத்தாழ 1.44 சூரிய நிறை உடையதாக இருக்கும்.

ஆனால், 8.30 சூரிய நிறை கொண்ட மிகக் கனமான விண்மீன்கள் வெடிப்பில் "நியூட்ரான்' விண்மீன்கள் பிறக்கும். 30 சூரியநிறை அதி கனரக விண்மீன்களில் இருந்து ஒளியை வெளியே விடாத, நிறை ஈர்ப்பு மிக்க கருந்துளை விண்மீன்கள் தோன்றும். இத்தனையும் கணித்து உரைத்த மேதை சந்திரசேகர் தான்.

பண்டைய ஒன்றுபட்ட பஞ்சாபில் தோன்றி இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்ற (1979) இரண்டாவது இந்தியர் அப்துஸ் சலாம். இன்று அணுவை உடைத்தால் அதனுள் மையக் கருவும் அதனைச் சுற்றி "எலக்ட்ரான்'கள் ஆகிய எதிர் மின்னணுக்களும் இருக்கும் என்பது அறிவோம்.

மையக் கருவினுள் ஒரே மாதிரியான நேர்மின் "புரோட்டான்'கள் ஒன்றை ஒன்று விலக்காமல் மின் நடுநிலை "நியூட்ரான்'களுடன் பிணைந்து இருக்க "மெசான்', "நியூட்ரினோ' போன்ற சில இம்மிகளே காரணம். இதுவே "மெலிதான அணுக்கரு விசை'.

அணுக்கருக்களை ஒன்றோடொன்று பிணைக்க உதவுவது "வலுவான அணுக்கரு விசை'. அணு உலைகளிலும் சூரியனிலும் செயல்படுவது போன்ற விசை இது. சுழலும் அணுக்களின் வெளிப்பாடு "மின்காந்த விசை'.

தொலைக்காட்சி, வானொலி, செல்லிடப்பேசி அலைகள் உள்பட, நுண்ணலை முதல் அண்டத்தின் "காஸ்மிக்' கதிர்கள் வரை அனைத்தும் இந்த வகை. நாம் காணும் ஒளிகூட மின் காந்த அலைவரிசையின் ஓர் அம்சம்தான். இந்த உண்மையை அறிவித்தவர் ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல் என்னும் அறிஞர்.

அணுத் தொகுதிகள் நிறைந்து சுழலும் பொருள்கள் இடையே நிகழ்வது "நிரையீர்ப்பு விசை'. பிரபஞ்சத்தையே ஆட்டுவிக்கும் ஆதார விசை.

இம்மிகள்-அணுக்கள்-பிண்டங்கள்-அண்டங்கள் இந்த நான்கு விசைகளைக் கணிதப்படுத்த முயன்று ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் கூட வெற்றி பெறவில்லை.

மின்காந்த விசைக்கும் மெலிதான அணுக்கரு விசைக்கும் இடையிலான தொடர்பினை அப்துஸ் சலாம் கணித்து வெளியிட்டார். 1968-ஆம் ஆண்டு "சமாதானத்திற்கான அணுக்கள்' (அற்ம்ள் ச்ர்ழ் டங்ஹஞ்ங்) என்கிற விருது வழங்கப்பட்டது.

"அறிவியலும் மதமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை அல்ல. இரண்டும் இருவேறு உலகங்கள். நம்பிக்கையின் அடிப்படையில் ஆனது மதம். காரண, காரிய பகுப்பாய்வின் அடிப்படையில் ஆனது அறிவியல். முன்னது மனித உள்ளத்தின் அக உலகம். பின்னது மனித உடலின் புற உலகம். நான் ஒரு முஸ்லிம்.

அதேவேளையில் நான் ஒரு விஞ்ஞானி. அறிவியல் கருத்தோட்டங்கள் வழி இயற்கையினை ஆட்படுத்தவும், புது அறிவு படைக்கவுமே குரான் போதிக்கிறது. புனித குரானின் ஆன்மிகச் செய்திகளை நான் நம்புகிறேன்'. இதுதான் அப்துஸ் சலாம் என்ற விஞ்ஞானியின் சமநோக்குப் பார்வை.

அமெரிக்காவின் விரிந்த வீதியில் தன்னந்தனியாக "வாக்கிங்' (நடைப் பயிற்சி) போனவரை வெள்ளைக் காவல் துறையினர் தூக்கிப் போட்டதில் முதுகுத் தண்டு ஒடிந்து மருத்துவமனையில் பரிதாபமாகக் கிடக்கிறார். அவர் செய்த ஒரே பாவம், ஒன்றரை வயதுப் பேரனைப் பார்ப்பதற்குக் கண்டம் விட்டுக் கண்டம் பறந்து சென்றதுதான்.

அமெரிக்காவில் இந்திய மதுபானக் கடையில் இன்னொருவரை கொன்றே போட்டார்கள். கவனிக்கவும், இருவருமே பாரதப் பிரதமரின் மாநிலத்தைச் சார்ந்தவர்கள்.

இத்தனையும் சாதாரண அமெரிக்கர்கள் செய்தவை அல்ல, அமெரிக்க அரசின் இயந்திர நடவடிக்கைகள். இந்த லட்சணத்தில் இங்கு சில விசுவாசிகள் எதற்கு எடுத்தாலும் "அமெரிக்காவைப் பார், இங்கிலாந்தைப் பார்' என்று கூறுகிறார்கள்.

மக்களைக் கிளறி விடுவதோடு நின்றால் பரவாயில்லை. வெளிநாட்டில் இருந்து "சைபர்' நிபுணர்கள், போராடத் தூண்டும் அறிஞர்கள், நிதி வழங்கும் முகவர்கள் எனப் பலரையும் "சுற்றுலாப் பயணி' என்ற பெயரில் இங்கு சகட்டு மேனிக்கு அழைக்கிறார்களாம்.

இங்கு வருபவர்கள் போராட்டங்கள் நடத்தவும், கணினித் தரவுகளைக் களவாடவும் அரசு சாரா அமைப்புகளுக்கு கற்றுத்தருகிறார்களாம்.

இதுகுறித்து கேட்டால், "அரசு மட்டும் அன்னியர்களை இங்கு வரவழைக்கவில்லையா' என்று பிரியத்துடன் "பிள்ளை'தனமாகக் கேள்வி வேறு. ஜனநாயக அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட அரசும், பணநாயக அமைப்பாளர்களின் அரசு சாரா நிறுவனங்களும் சரிநிகராம். எந்த அரசியல் சாசனம் சொல்லுகிறதோ?

அமெரிக்கா, ரஷியா, ஜப்பான், ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, இத்தாலி, ஸ்பெயின், கனடா, இந்தோனேசியா, பிரேசில் ஆகிய இத்தனைத் தனி நாடுகளும் நம் இந்திய ஜனத்தொகைக்குச் சமம்.

நாம் அமெரிக்கா ஆவதற்கு முதலில் செய்ய வேண்டியது, அமெரிக்க ஜனத்தொகை அளவுக்கு (32 கோடி) இங்கு மக்கள் தொகையைக் குறைக்க வேண்டும்.

அதற்காக, 94 கோடி இந்தியர்களை அரபிக் கடலிலோ, வங்காள விரிகுடாக் கடலிலோ மூழ்கடிக்க முடியுமா? இல்லையென்றால், இங்கிலாந்து மாதிரி (6.5 கோடி) ஆக என்ன வழி? சமூக அக்கறை

மிக்கவர்கள் இந்தியப் பரப்பளவை அமெரிக்கா மாதிரி ஆறு மடங்காக விரிவுபடுத்த அண்டை நாடுகளை ஆக்கிரமிக்கலாம் என்றும் சொல்வார்கள்.

அந்த நாடுகளில், அறைக்கு ஒருவர் வீதம் சௌகரியமாக வாழ்கிறார்கள். இந்தியாவில் அதே அளவு அறைக்குள் குறைந்தது 10 பேர் தங்குகிறார்கள்.

நம் நாட்டில் 36 கோடிப் பேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்வதாக வைத்துக்கொண்டாலும், மீதி 90 கோடிப் பேர் சுகமாக இருக்கிறார்கள் என்று தானே அர்த்தம்? இது அமெரிக்க ஜனத்தொகையைப் போல 3 மடங்கு சுபிட்ச நிலை அல்லவா?

ஆண்டுதோறும் "பசுமைக்குடில்' விளைவினால் புவிவெப்பம் அடையச் செய்கிற கரியமில வாயுவை, வளிமண்டலத்தில் கலக்கும் முதல் நாடு சீனா.

உலகின் மூன்றாம் பெரும்பரப்பில் (93 லட்சம் சதுர கிலோ மீட்டர்) தொழிற்சாலைப் புகை உடைய நாடு. 23,950 லட்சம் டன் மாசுகளைக் காற்றில் கலக்கிறார்கள்.

நம் நாட்டினும் மூன்று மடங்கு விரிந்த பரப்பு கொண்ட அமெரிக்கா உலகின் இரண்டாம் "புகை நாடு'. 14,030 லட்சம் டன் கரியமில வாயுவைக் காற்றில் உமிழ்கிறது.

உலகின் மக்கள் தொகையில் 19 சதவீதம் பேர் வாழும் சீனாவும், 4.4 சதவீதம் கொண்ட அமெரிக்காவும் கூட்டாக வெளிப்படுத்தும் மொத்த அசுத்தக் கணக்கில் ஆறில் ஒரு பங்குதான் இந்தியக் கரியமில வாயு. வெறும் 5,960 லட்சம் டன். இத்தனைக்கும் உலகின் 17.5 சதவீத மக்கள் நாம் தான்.

பாருங்களேன், உலகின் முதல் பெரும்பரப்பும் (1.63 கோடி சதர கிலோ மீட்டர்), இந்தியாவின் பத்தில் ஒரு பங்கு (14.5 கோடி பேர்) ஜனங்களும் கொண்ட நெருக்கடி இல்லாத நாடு ரஷியா.

அவர்கள் தாங்களும் எவருக்கும் இளைத்தவர்கள் இல்லை என்று 4,490 லட்சம் டன்கள் "படிமைகுடில்' வாயுவை வளிமண்டலத்தில் செலுத்தி நான்காம் இடத்தைத் தக்கவைத்து கொண்டுள்ளனர்.

தெரியாமல்தான் கேட்கிறேன். இவ்விதம் அசுர வேகத்தில் உலகத்தையே பகாசுரக் கூவம் ஆக்கிவரும் "வளர்ந்த' நாடுகள் எல்லாமே புவியின் வடபாதிக் கோளத்தில் அல்லவா இருக்கின்றன?

அது எப்படி தென் துருவ அண்டார்டிகாவில் மட்டும் அதிகப்படியான ஓசோன் ஓட்டை? நம் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எப்போதாவது அமெரிக்க, ஐரோப்பியப் நாடாளுமன்றத்தில் போய் கேட்டது உண்டா?

இந்த ஆண்டு ஆற்றல் வளம், கல்வி, வேளாண்மை, தகவல் தொடர்பு, சுகாதாரம் ஆகிய ஐந்து துறைகளில் அறிவியல் "ஒளிச்சேர்க்கை'யினால் மட்டுமே பயன்மரம் உள்ளூரில் பழுக்கும்.

**கட்டுரையாளர்: இஸ்ரோ விஞ்ஞானி (ஓய்வு).**

## சொட்டு நீர்ப் பாசனம் அமைக்கும் பதிவு:விவசாயிகளுக்கு கால அவகாசம் நீட்டிப்பு

பண்ணை நீர் மேலாண்மைத் திட்டம், தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கத்தின் கீழ் சொட்டு நீர்ப் பாசனம் அமைப்பதற்காக விவசாயிகள் இணைய தளம் மூலம் பதிவு செய்து கொள்வதற்காக கால அவகாசம் இம்மாதம் 24 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவ ராவ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: பண்ணை நீர் மேலாண்மைத் திட்டம், தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கத்தின் கீழ்

சொட்டு நீர்ப் பாசனம் அமைப்பதற்காக ஆதிதிராவிடர், பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கும், இதர வகுப்பு விவசாயிகளுக்கும் இணைய தளம் மூலம் பதிவு செய்து கொள்வதற்காக கால அவகாசம் இம்மாகம் 24-ஆம் தேதி வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் கணிணி சிட்டா, அடங்கல், நில வரைபடம், மார்பளவு புகைப்படம், குடும்ப அட்டை நகல், சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடம் பெறப்பட்ட சிறு,குறு விவசாயிக்கான சான்றிதழ், மின் இணைப்பு அட்டை நகல் ஆகிய ஆவணங்களுடன் தங்களது வட்டார வேளாண்மை, தோட்டக்கலை உதவி இயக்குநர்களை அணுகி பயன்பெற வேண்டும். ஒரு குடும்ப அட்டையில் உள்ள நபர்களுக்கு அதிகபட்சமாக 5 ஹெக்டர் பரப்புக்கு சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதமும் மானியமாக வழங்கப்படுகிறது. இதில் விண்ணப்பிக்கும் விவசாயிகளுக்கு தனியாக மின் இணைப்பு, மோட்டார் வசதி இருக்க வேண்டும். தகுதி உள்ள விவசாயிகள் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

## தேயிலை விவசாயப் பயிற்சி முகாம்

பந்தலூர் பகுதியிலுள்ள பழங்குடியின விவசாயிகளுக்கு இயற்கைத் தேயிலை விவசாயம் தொடர்பான பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது. பழங்குடியினர் மற்றும் கிராமிய அபிவிருத்தி மையம் சார்பில் நடைபெற்ற முகாமில், தேயிலை வாரிய விரிவாக்க அலுவலர் சபி, கூடலூர் உதவி தோட்டக்கலை இயக்குநர் சிபிலா மேரி, வேளாண் விற்பனைப் பிரிவு அலுவலர் லட்சுமணன், சிடிஆர்டி அறக்கட்டளையின் செயல் இயக்குநர் ஆர்.எஸ்.ரெங்கநாதன் ஆகியோர் கலந்துகொண்டு இயற்கை முறையில் தேயிலை பயிரிடுவது மற்றும் தேயிலைக்கான இயற்கை இடுபொருள்களை உற்பத்தி செய்வது குறித்து விளக்கமளித்தனர். பிரகாஷ் வரவேற்றார். முகாமில், பந்தலூர் பகுதி பழங்குடியின விவசாயிகள் கலந்துகொண்டனர். வாசுதேவன் நன்றி

கூறினார். இதற்கான ஏற்பாடுகளை நிகழ்ச்சி அலுவலர் என்.செந்தில்குமார் செய்திருந்தார்.

## ரூ.1.19 கோடியில் நீர்வடிப்பகுதி மேலாண் பணி

நாமக்கல் சேந்தமங்கலம் பகுதியில் ரூ.1.19 கோடி மதிப்பிலான நீர்வடிப்பகுதி மேலாண் திட்டத்தை ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெள்ளிக்கிழமை ஆய்வு செய்தார். நாமக்கல் மாவட்ட வேளாண் துறையின் நீர்வடிப்பகுதி மேலாண் திட்டத்தின் கீழ் தடுப்பணை, உலர் தளங்கள், கதிரடிக்கும் களங்கள், தடுப்புச் சுவர், ஓடைகள் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி, சேந்தமங்கலம், நாமக்கல் பகுதிகளில் நீர்வடிப்பகுதித் திட்டங்களை ஆய்வு செய்தார். நாமக்கல் வட்டாரத்தில் 13 கதிரடிக்கும் களங்கள், 12 குடிநீர்த் தொட்டிகள், சேந்தமங்கலம் வட்டாரத்தில், 8 கதிரடிக்கும் களங்கள், 18 குடிநீர்த் தொட்டிகள் ஆகியவற்றுக்காக ரூ.1.19 கோடி மதிப்பிலான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இணை இயக்குநர் கார்த்திகேயன், நடவு வல்லுநர் சுப்ரமணியன், விரிவாக்க அலுவலர் சுப்ரமணியம், உதவி இயக்குநர்கள் மாயக்கண்ணன், சண்முகம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## பாபா அணு ஆராய்ச்சி மைய வீரிய ரக நிலக்கடலை விற்பனை

ராதாபுரம் வட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் வீரிய ரக நிலக்கடலை விற்பனை செய்யப்பட்டது. பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் வீரிய ரக நிலக்கடலையான டிஜி37ஏ என்ற ரகமானது அதிக மகசூல் தரவல்லதாக அமைந்துள்ளது. இந்த ரகத்தை பாளையங்கோட்டை மத்திய சிறையில் உள்ள கைதிகளிடம் அறிமுகப்படுத்தி நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. சிறையில் 1.6 ஹெக்டேரில் இந்த ரக நிலக்கடலை பயிரிடப்பட்டு வருகிறது. இதன்

தொடர்ச்சியாக, மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகளிடம் இந்த ரக நிலக்கடலையை கொண்டு சேர்க்கும் வகையில் சிறப்பு விற்பனை நடைபெற்று வருகிறது. ராதாபுரம் வட்டத்தைச் சேர்ந்த விவசாயி களிடையே இந்த ரக நிலக்கடலையை அறிமுகம் செய்யவும், விற்பனை செய்யவும் வெள்ளிக்கிழமை சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திருநெல்வேலி மாவட்ட வேளாண்மைத் துறை, பாபா அணு ஆராய்ச்சி மையம் ஆகியவை ஒருங்கிணைந்து நடத்திய இந்நிகழ்ச்சி ராதாபுரம் வட்டாட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் ம.க. குழந்தைவேல், விவசாயிகளுக்கு நிலக்கடலைகளை வழங்கி வாழ்த்திப் பேசினார். அணு ஆராய்ச்சி மைய மூத்த விஞ்ஞானி டேனியல் செல்லப்பா பேசியதாவது: ராதாபுரம் பகுதி வறட்சி பாதித்த பகுதியாக இருந்தாலும் நிகழாண்டு நல்ல மழை கிடைத்துள்ளது. இந்த மழையை பயன்படுத்தி குறைந்த வயதுடைய அணு ஆராய்ச்சி மைய ரக நிலக்கடலை சாகுபடி செய்தால் அதிக மகசூல் பெறலாம். எனவே, ராதாபுரம் வட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் வீரிய ரக நிலக்கடலை சாகுபடியை மேற்கொண்டு லாபம் ஈட்ட வேண்டும் என்றார் அவர். பாளையங்கோட்டை மத்திய சிறை கூடுதல் கண்காணிப்பாளர் சி. ஆறுமுகம் பேசியதாவது: வீரிய ரக நிலக்கடலையை பயிரிட்டு சிறைக் கைதிகள் ரூ.2.6 லட்சம் வரை லாபம் ஈட்டியுள்ளனர். குறைந்த வயதுடைய இந்த ரகம் மானாவாரி சாகுபடியில் அதிக மகசூல் தரவல்லது. எனவே, விவசாயிகள் இந்த ரகத்தை பயமின்றி தேர்வு செய்யலாம் என்றார் அவர். ராதாபுரம் வேளாண்மை உதவி இயக்குநர் க. முருகேஷ் பேசியதாவது: கூடங்குளம் பகுதியில் ஏற்கெனவே இந்த ரகம் பயிரிட்டு விவசாயிகளுக்கு மிகுந்த பலன் அளித்துள்ளது என்றார். விழாவில், அட்மா தொழில்நுட்ப மேலாளர் ஜாய் பத்ம தினேஷ், வேளாண்மை அலுவலர் அஸீமா பேகம், அணு ஆராய்ச்சி நிலைய மக்கள் தொடர்பு அலுவலர் லோகு, விவசாயி செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**"அம்மா பண்ணை' மகளிர் குழுவினருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி**

சிதம்பரம் அருகே உள்ள பால்வாத்துண்ணான் மற்றும் தில்லைவிடங்கன் கிராமத்தில் அம்மா பண்ணை மகளிர் குழுவினருக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வெள்ளிக்கிழமை அளிக்கப்பட்டது. பரங்கிப்பேட்டை வட்டார வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் கீழ் அளிக்கப்பட்ட இந்தப் பயிற்சி முகாமில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சி.கல்பனா வரவேற்றார். பரங்கிப்பேட்டை வட்டார அட்மா ஆலோசனைக்குழுத் தலைவர் சுப்பிரமணியன் பயிற்சியினை தொடங்கி வைத்தார். வட்டார வேளாண் உதவி இயக்குநர் சு.ரமேஷ் மகளிர் குழுவினருக்கு உற்பத்தி தொழில் தொடங்குவது பற்றியும், உயிரியல் பூச்சிக் கொல்லி மருந்துகள் தயாரிப்பு குறித்தும் பயிற்சி அளித்தார். கடலூர் மாவட்ட நீர்வடி மேம்பாட்டு முகமை திட்டத்தின் சமூகவியல் அலுவலர் சுகுணாதாஸ்காண்ட் குழு உறுப்பினர்களுக்கு பதிவேடு பராமரிப்பு, வங்கியில் கடன்பெறும் முறைகள், குழுவின் விதிமுறைகள் மற்றும் செயல்படுத்தும் முறைகள் பற்றி விளக்கிப் பயிற்சி அளித்தார். வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை வேளாண் அலுவலர்கள் சித்ரா, பிரேமலதா ஆகியோர் பயிற்சி அளித்தனர். பயிற்சியில் அட்மா ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் லட்சுமி, வனஜா, அம்மா பண்ணை மகளிர் குழுத் தலைவிகள் தேன்மொழி, வனஜா உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். பயிற்சி ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ராஜவேல், மனோஜ் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அதிக மகசூலுக்கு மண் மாதிரி அவசியம்வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்**

தஞ்சாவூர்: "அனைத்து வகை பயிரிகளிலும் அதிக மகசூல் பெற, சாகுபடிக்கு முன், மண்பரி சோதனை செய்வது அவசியம்,' என, தஞ்சை மாவட்ட சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: மண்ணில் உள்ள பேரூட்ட சத்துக்களான தழை, மணி, சாம்பல் சத்துகளின் அளவை கணக்கிட்டு சமச்சீர் முறையில் உரமிடுவதற்கு, மண் ஆய்வு அவசியம். பயிர் சாகுபடி செய்வதற்கு முன், மண் ஆய்வு செய்ய வேண்டும். மண் மாதிரியுடன் உழவரின் பெயர், கிராமம் மற்றும் முகவரி, சர்வே எண், முன்னர் பயிரிடப்பட்ட பயிரின் பெயர், அடுத்து பயிரிடப்போகும் பயிரின் பெயர் ஆகிய விவரங்கள் அடங்கிய மண் மாதிரி விவரத்தையும், மண் பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்ப வேண்டும். களர், உவர் நிலங்களுக்கு தனித்தனியாக மண் மாதிரிகள் எடுக்க வேண்டும். இதில், நெல், சோளம், கம்பு, நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கு, 15 செ.மீ., ஆழத்திலும், மிளகாய், பருத்தி, கரும்பு, வாழை, காய்கறிகள், மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்களுக்கும், தென்னை மற்றும் மரப்பயிர்களுக்கும், 90 செ.மீ., ஆழத்திலும், பழ மரங்களுக்கு, 150 முதல் 180 செ.மீ., ஆழம் வரையிலும், புல் வகை பயிர்களுக்கு, 10 செ.மீ., ஆழத்திலும் மண் மாதிரிகள் எடுக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

**மாவட்டத்தில் நுண்ணீர் பாசனத்துக்குரூ.21 லட்சம் நிதி ஒதுக்கீடு - கலெக்டர்**

தஞ்சாவூர்: "மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இன விவசாயிகள், மானியத்தில் நுண்ணீர் பாசன அமைக்க, 21.06 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது,' என, கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார். இதுகுறித்து கலெக்டர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், தங்கள் வயல்களில் சாகுபடி செய்யும், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு, நுண்ணீர் பாசனம் அமைத்து, நீரை, சிக்கனமாக பயன்படுத்தி, லாபம் பெறலாம்.

இதற்காக, 2014 - 15ம் ஆண்டில் பண்ணை நீர் மேலாண்மையில் தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கத்தின் கீழ், 33.20 ஹெக்டேரில் நுண்ணீர் பாசனம் அமைக்க, 21.06 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினருக்கு, 20 சதவீதம் ஒதுக்கப்பட்டு உள்ளது. இதில், 75 சதவீதம் மற்றும் 100 சதவீதம் மானியத்தில், நுண்ணீர் பாசனம் அமைத்து கொள்ளலாம். வேளாண் துறை மற்றும் தோட்ட கலைத்துறை பயிர்களுக்கு மானியத்தில் நுண்ணீர் பாசனம் அமைக்க விரும்பும், தகுதியான தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின விவசாயிகள், உடனடியாக, மாவட்ட மற்றும் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளலாம். தஞ்சாவூர் தோட்டக்கலை துணை இயக்குனரை, 04362- 271880, 232540, 98426 13902, என்ற தொலைபேசி எண்களில், தஞ்சாவூர், திருவையாறு தோட்டக்கலை உதவி இயக்குனரை, 04362-255640, 9443073157, பூதலூர், ஒரத்தநாடு தோட்டக்கலை உதவி இயக்குனரை, 04372-234300, 9655577082, கும்பகோணம், திருவிடைமருதூர் தோட்டக்கலை உதவி இயக்குனரை, 0435- 2414594, 9965362562, பாபநாசம், அம்மாப்பேட்டை, திருப்பனந்தாள் தோட்டக்கலை உதவி இயக்குனரை, 04374- 220040, 9842184435, பட்டுக்கோட்டை, மதுக்கூர் தோட்டக்கலை உதவி இயக்குனரை, 04373- 237020, 9345746431, பேராவூரணி, சேதுபாவாசத்திரம், திருவோணம் தோட்டக்கலை உதவி இயக்குனரை, 04373- 231073, 9698719704 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு, தங்கள் வயலில் நுண்ணீர் பாசனம் அமைத்துக்கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்தார்.

## <u>பெருந்துறை கூட்டுறவு சங்கம்எள் ஏல விற்பனை துவக்கம்</u>

ஈரோடு:பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், எள் ஏல விற்பனை துவங்கியது.பெருந்துறை, வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் வளாகத்தில்,

கடந்த, 5ம் தேதி முதல், எள் ஏல விற்பனை மையம் துவக்கப்பட்டது. வாரந்தோறும் வியாழக்கிழமை எள் ஏலம் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், 71 மூட்டைகள் விற்பனைக்காக விவசாயிகளால் கொண்டு வந்தனர். முதல் தர எள் கிலோ, 67 ரூபாய்க்கும், இரண்டாம் தர எள், 54 ரூபாய்க்கும் ஏலம் கோரப்பட்டது. தற்போது எள் அறுவடை துவங்கும் காலம் என்பதால், கூட்டுறவு சங்க வளாகத்தில், விவசாயிகள் பயன் பெறும் வகையில், சங்க நிர்வாகம் ஏல விற்பனை மையத்தை துவங்கி உள்ளது. விவசாயிகள், இந்த சங்கத்தில் எள்ளை விற்பனை செய்து பயன்பெறலாம். விவசாயிகள் ஏல விற்பனைக்காக கொண்டு வரும் எள் மூட்டைகளுக்கு, அன்றைய சந்தை மதிப்பீட்டில், 50 சதவீதம் முன்பணம் வழங்கப்படும். விவசாயிகளின் எள் மூட்டைகளுக்கு அவசர தேவைக்கு, குறைந்த வட்டியில், சரக்கீட்டுக்கடன் வசதி செய்து தரப்படும். எள் ஏலத்தின் போது, விற்காமல் இருக்கும் மூட்டைகளை, இலவசமாக வாடகையின்றி, சங்க குடோனில் அடுத்த ஏலம் நடக்கும் வரை, விவசாயிகள் இருப்பு வைத்துக் கொள்ளலாம். ஏலம் முடிந்தவுடன், ஏலத்துக்கு உண்டான தொகை, சங்கத்தின் மூலம் உடனே வழங்கப்படும்.

## நீலகிரி மாவட்டத்தில் விடிய, விடிய கனமழை

ஊட்டி:நீலகிரி மாவட்டத்தில் நேற்று முன் தினம் விடிய, விடிய கனமழை கொட்டியது. குன்னூரில் ஏற்பட்ட மண் சரிவால் ரயில் போக்குவரத்து பாதிப்படைந்தது. நீலகிரி மாவட்டத்தில், இன்னும் சில தினங்களில், கோடை சீசன் துவங்க உள்ள நிலையில், கடந்த சில நாட்களாக, பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம், இரவு மாவட்டத்தின், பல இடங்களில், இடியுடன் கூடிய பலத்த மழை கொட்டித் தீர்த்தது. அதிகபட்சம், குன்னூரில், 11.6 செ.மீ., மழை பதிவாகி இருந்தது. மாவட்டம் முழுவதும், 34.5 செ.மீ., மழை பதிவாகி இருந்தது.மழையால், ஊட்டி பஸ் ஸ்டாண்ட், மஞ்சூர், குன்னூர் உட்பட

பல இடங்களில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது. பல இடங்களில் வீடுகளின் முன், பின்புறங்களில் இருந்த தடுப்புகள் இடிந்தன; ஆங்காங்கே, சாலைகளில் மண் சரிவு ஏற்பட்டது. பாதிப்பட்ட மக்கள், நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். வருவாய் துறை அதிகாரிகள் கூறுகையில், 'மழையால், பகுதி மற்றும் முழுமையாக இடியும் வீடுகள், அதனால் ஏற்படும் உயிர் சேதங்கள் மட்டுமே, கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். அவர்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்படும். மாறாக, வீடுகளுக்குள் வெள்ளம் புகுவது, மண்சரிவு உட்பட பாதிப்புகள், கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது' என்றனர். மலை ரயில் பாதையில் மண்சரிவு மேட்டுப்பாளையத்தில் இருந்து ஊட்டிக்கு, 182 பயணிகளுடன், நேற்று காலை 7:10 மணிக்கு, மலை ரயில் புறப்பட்டது. ரயில், ரன்னிமேடு பகுதிக்கு வருவதற்குள், 'குன்னூரில் நள்ளிரவில் பெய்த கனமழையின் காரணமாக, காட்டேரிக்கு செல்லும் ரயில் பாதையில், மண்சரிவு ஏற்பட்டுள்ளது' என, தகவல் தரப்பட்டது. உடனே, ரன்னிமேடு ஸ்டேஷனில் ரயில் நிறுத்தப்பட்டதால், பயணிகள் அதிர்ச்சி அடைந்தனர். பின், பயணிகள் அனைவரும், அரசு பஸ்கள் மற்றும் தனியார் வாகனங்கள் மூலம், குன்னூர் மற்றும் ஊட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ரயில்வே ஊழியர்கள், உடனடியாக மண்சரிவை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். இதேபோல், ஊட்டி -- குன்னூர் மலை ரயில் பாதையில், வெலிங்டன் அருகே விழுந்த மரத்தை, ஊழியர்கள் வெட்டி அகற்றினர். இதனால், காலை 7:50 மணிக்கு புறப்பட்ட ரயில், 40 நிமிடங்கள் தாமதமாக ஊட்டிக்கு சென்றது.

## <u>மூங்கில்துறைப்பட்டு பகுதியில் கோமாரி நோய் தடுப்பு முகாம்</u>

மூங்கில்துறைப்பட்டு:மூங்கில்துறைப்பட்டு பகுதியில் நேற்று நடந்த கோமாரி நோய் தடுப்பு முகாமில் 1400 க்கும் மேற்பட்ட மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டன. மூங்கில்துறைப்பட்டு பால்கூட்டுறவு ,

அம்பேத்கர் நகர், மேட்டூர், தேவி நகர், பழையூர், பொரசப் பட்டு, பொருவளூர், வேடியப்பன்கோவில் பகுதிகளில் கோமாரி நோய் தடுப்பு முகாம் நடந்தன. இவற்றில் 1400 க்கும் மேற்பட்ட மாடுகளுக்கு நோய் தடுப்பூசி போடப்பட்டன. கால்நடை மருத்துவர் சங்கர் கணேஷ், சிவா, கால்நடை ஆய்வாளர்கள் செந்தில், கந்தன்,வரதராஜ் கால் நடை உதவியாளர்கள் ஸ்ரீதர், பாலுசாமி, ராமசாமி, வெங்கடேசன் கலந்துக் கொண்டனர்.

**<u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>**

விக்கிரவாண்டி:விக்கிரவாண்டி ஒன்றியம் அய்யூர் அகரம் கிராமத்தில் கால்நடைத்துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி மருத்துவ முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் குமாரராஜா தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். மண்டல இணை இயக்குனர் டாக்டர் தர்மராஜ், உதவி இயக்குனர் டாக்டர் சுந்தர் ராஜ், நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குனர் டாக்டர் மகேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் . கால் நடை மருத்துவர் டாக்டர் பிரபாகர மூர்த்தி தலைமையிலான குழுவினர் 850 பசு மற்றும் எருமைகளுக்கு தடுப்பூசி போட்டு நோய் தடுப்பு ஆலோசனை வழங்கினர். டாக்டர்கள் ஆல்பர்ட் ஆரோக்கியராஜ் , சுமையா பானு, கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் தனலட்சுமி, ரஞ்சித், அரிச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**<u>தொடர்மழை: உரமிடும் பணியில் விவசாயிகள்</u>**

தேவாரம்:தேவாரம் பகுதியில் பெய்த தொடர் மழையால் உரமிடும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். தேவாரம் சாக்குலூத்து, பெரம்புவெட்டி, கோயில்காடு, பொன்குன்றம் உட்பட மலையடிவாரப்பகுதியில் மானாவாரி விவசாயம் நடக்கிறது. நான்கு நாட்களாக இப்பகுதியில் பலத்த மழை பெய்தது. காட்டாற்று ஓடைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.வனப்பகுதிக்குள் பெய்த மழையால் சிற்றோடைகள், நீர் வீழ்ச்சிகளில் தண்ணீர் வரத்து ஏற்பட்டு வறட்சி

நீங்கியுள்ளது. ஈரப்பதம் இருப்பதால் அடுத்த சில நாட்களுக்கு காட்டு தீ எரிய வாய்ப்பில்லை.விவசாயிகள் கூறுறியதாவது: கோடை துவக்கத்தில் நல்ல மழை பெய்துள்ளதால் வாழை, கரும்பு, தென்னை உள்ளிட்ட பயிர்களில் நல்ல மகசூல் கிடைக்கும். மானாவாரி நிலங்களில் சித்திரை பட்ட விதைப்பிற்கு உழவு பணி மேற்கொள்ள இந்த மழை கை கொடுத்துள்ளது. தற்போது மலையடிவாரத்தை ஒட்டிய நிலங்களில் பயிரிட்டுள்ள தக்காளி, தட்டை பயிறு, அவரை பயிர்களுக்கு உரமிடும் பணி மும்முரமாக நடக்கிறது. தொடர்ந்து சில நாட்கள் மழை கிடைத்தால் வறட்சி நீங்கும், என்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மஞ்சள் விலை உயர்ந்தது</u>

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று (5ம் தேதி) நடந்த ஏலத்தில் ரூ.5.93 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது. கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் திங்கள், வியாழன் தோறும் மஞ்சள் ஏலம் நடக்கிறது. நேற்று நடந்த ஏலத்தில், விரலி மஞ்சள் 54 குவின்டாலும், கிழங்கு மஞ்சள் 23 குவின்டாலும் என மொத்தம் 77 குவின்டால் விற்பனைக்கு வந்தது. இதை கரடிமடை, போளுவாம்பட்டி பகுதியை சேர்ந்த விவசாயிகள் கொண்டு வந்தனர். விற்பனைக்கு வந்த மஞ்சள் அனைத்தும் விற்பனையானது. ஏலத்தில், விரலி மஞ்சள் குவின்டால் ரூ.6,862 முதல் 8,569 வரையும், கிழங்கு மஞ்சள் ரூ.6,851

முதல் ரூ.7662 வரையும் விற்றது. இதன் மூலம் விரலி மஞ்சள் சராசரி விலை ரூ.8,000. கிழங்கு மஞ்சள் சராசரி விலை ரூ.7,000. ஈரோடு, கோவை, பொள்ளாச்சியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். மொத்த விற்பனை மொத்த மதிப்பு ரூ.5.93 லட்சம். இது கடந்த ஏலத்தை காட்டிலும் ரூ.7.32 லட்சம் குறைவாகும். விரலி மஞ்சள் குவின்டாலுக்கு ரூ.400 அதிகரித்துள்ளது. கிழங்கு மஞ்சள் குவின்டாலுக்கு ரூ.400 குறைந்துள்ளது. 3 மாதத்திற்கு பிறகு விரலி மஞ்சள் விலை ரூ.8 ஆயிரத்தை தாண்டியதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## கல்லாபுரம் பாசனத்திற்கு உயிர் தண்ணீர் கிடைத்ததால் 300 ஏக்கர் நெற்பயிர் தப்பியது

உடுமலை,: கல்லாபுரம்,ராமகுளம் வாய்க்கால் பாசனத்திற்கு உயிர் நீர் கிடைத்ததால் அங்கு பயிரிடப்பட்டிருந்த 300 ஏக்கர் நெற்பயிர் தப்பியது. உடுமலை அருகே உள்ள அமராவதி அணையில் இருந்து கல்லாபுரம், ராமகுளம் வாய்க்கால் பாசனப்பகுதிகள் நேரடி பாசன வசதி பெறுகின்றன. இதில் 3500 ஏக்கர் நிலம் உள்ளது.பெரும்பாலும் நெல்,கரும்பு பயிர் செய்கின்றனர். நெல் இருபோகம் விளையக்கூடியது. ஆண்டுதோறும் ஜூன் முதல் மார்ச் மாதம் வரை பாசன வசதி கொண்டது. தற்போது ஒருபோக நெல்சாகுபடி முடிந்து விட்டது. தொடர்ந்து 300 ஏக்கரில் 2ம் போக நெல் சாகுபடி செய்யப்பட்டது. ஆனால் அணையில் தண்ணீர் குறைந்ததால் இந்த வாய்க்கால்களுக்கு நீர்வரத்து இன்றி நெற்பயிர் காயத் துவங்கின. உயிர் தண்ணீர் விட வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் இரு வாய்க்கால்களின் ஷட்டர்களில் நீர்மட்டம் காய்ந்ததால் அணையில் இருந்து 3 கி.மீட்டர் தூரத்தில் 5 ஆயிரம் மூட்டை மணல் கொண்டு கால்வாய் அமைத்து அணைக்கு வரும் தண்ணீரை இந்த இரு வாய்க்கால்களின் ஷட்டர் வழியாக பாசனத்துக்கு பயன்படுத்தினர். இந்த உயிர் தண்ணீர் கிடைத்ததன் காரணமாக காய்ந்த நிலையில் இருந்த

நெற்பயிர் மீண்டும் தழைக்கத் துவங்கி உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

**<u>ஈரோடு மாவட்டம் முழுவதும் மழை சென்னிமலையில் 83 மிமீ பதிவு</u>**

ஈரோடு, :நேற்று முன்தினம் இரவு மாவட்டம் முழுவதும் பரவலாக மழை கொட்டியதால் கோடை உக்கிரம் சற்று தணிந்தது. ஈரோடு மாநகரில் பெய்த கனமழையால் பாதாள சாக்கடை நிரம்பி ரோட்டில் சாக்கடை நீர் பெருக்கெடுத்து ஓடியது. மேட்டூர் ரோடு, முனிசிபல்காலனி, பிரப்ரோடு, பெருந்துறை ரோடு, சென்னிமலை ரோடு, பூந்துறை ரோடு, பவானி ரோடு, பள்ளிபாளையம் ரோடு என அனைத்து சாலைகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இரவு 7 மணிக்கு துவங்கிய மழை 3 மணி நேரம் இடைவிடாமல் பெய்தது. பின்னர், தூரல் மழையாக இரவு முழுவதும் தொடர்ந்து பெய்து விடியற்காலை மழை நின்றது. இதேபோல சென்னிமலை, கவுந்தப்பாடி, ஒரத்துப்பாளையத்திலும் தொடர்ந்து கனமழை பெய்தது. நேற்று முன்தினம் பெய்த கனமழையால் நேற்று காலை பவானிசாகர் அணையின் நீர்வரத்தும் அதிகரித்தது. கடந்த ஒரு வாரமாக 150 முதல் 170 கனஅடியாக இருந்த அணையின் நீர்வரத்து நேற்று காலை 1073 கனஅடியாக அதிகரித்தது. ஆற்றின் வழியே 800 கனஅடியும், கீழ்பவானி வாய்க்காலில் 2100 கனஅடி வீதமும் தண்ணீர் வெளியேறி கொண்டிருந்தது. 105 அடி கொள்ளளவு கொண்ட அணை யின் நீர்மட்டம் நேற்று காலை 65.99 அடியாக இருந்தது. மாவட்டத்திலே யே அதிகளவாக சென்னிமலையில் 83 மி.மீ., மழையும், ஈரோட்டில் 43 மி.மீ., மழையும் பதிவாகி இருந்தது. நேற்று காலை 8 மணி வரை பதிவான மழையளவு விபரம் மிமீ.,ங் வருமாறு: பவானிசாகர் 5.8 , ஒரத்துப்பாளையம்- 44, சத்தியமங்கலம்- 24, கொடிவேரி- 9, கோபி- 9, எலந்தகுட்டைமேடு- 33, கவுந்தப்பாடி- 24, பெருந்துறை- 11, பவானி- 15, ஓலப்பாளையம்- 25, புங்கம்பாடி- 7.2, ஈரோடு- 43, அறச்சலூர்- 11,

சென்னிமலை- 83, சிவகிரி- 5, முத்தூர்- 18, மங்கலப்பட்டி- 2, காங்கிரஸ்- 48.2

**பூம்புகாரில் மீன் உணவு பொருட்கள் தயாரிப்பு பயிற்சி**

பூம்புகார், : பூம்புகார் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் மீன்உணவு பொருட்கள் தயாரித்தல் 5 நாள் பயிற்சி நிறைவு விழா நடைபெற்றது. தேசிய மீன்வள மைய மேம்பாட்டு வாரியம், நாகப்பட்டினம் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் கடலோர கிராமங்களில் உள்ள மீனவ பெண்களிவ் வாழ்வாதாரத்தை மேம்படுத்த "மதிப்பு கூட்டிய மீன் உணவுப்பொருட்கள் தயாரித்தல்" பற்றிய 5 நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. நாகை எம்.எஸ்.சுவாமி நாதன் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி வேல்விழி தலைமை வகித்தார். பூம்புகார் பஞ்சாயத்தார் சந்திரபாபு, கண்ணையன், பூம்புகார் எம்.எஸ்.ஆராய்ச்சி நிறுவன பணியாளர்கள் உன்னிதான், செல்வராஜ், செல்வகணபதி, ஜெயக்குமார், துரைராஜ் முன்னிலை வகித்தனர். பணியாளர் ரஞ்சிதா வரவேற்றார். முகாமில் ஆராய்ச்சி பணியாளர் குயிலி, பூம்புகார் ஐ.ஓ.பி உதவி மேலாளர் பிரபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். 20 பெண்கள் பயிற்சி பெற்றனர்.மைய தலைவர் டாக்டர் கிருஷ்ணன் அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார். ஏற்பாடுகளை நிறுவன ஆராய்ச்சி பணியாளர்கள் குயிலி, ரஞ்சிதா செய்திருந்தனர்.

**தானியசேமிப்புபயிற்சிமுகாம்**

மானாமதுரை, : மானாமதுரை வட்டார விவசாயிகளுக்கு தானிய சேமிப்பு குறித்த பயிற்சி முகாம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநகர் அருணாசலம் தலைமை வகித்தார். முகாமில் தானியங்கள், பயறுவகைகள், எண்ணெய் வித்துக்களை சேமித்து வைக்கும் வழிமுறைகள் பற்றியும், தரம்பிரித்தல், அறுவடைக்கு பின் விதைநேர்த்தி தொழில்நுட்பம், மதிப்பு கூட்டுதல் உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் குறித்தும் வேளாண்மை அலுவலர் கமலாதேவி,

வேளாண்மை உதவி அலுவலர் ராசு ஆகியோர் விளக்கினர். மாநில வேளாண் விற்பனை வாரியம், வேளாண் வணிகத்துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**<u>கோவில்பட்டியில் கொடுக்காய்புளி பழங்கள் ஒரு கிலோ ரூ.200க்கு விற்பனை</u>**

கோவில்பட்டி, : கோவில்பட்டியில் கொடுக்காய்புளி பழங்கள் கிலோ ரூ.200க்கு விற்கப்பட்டாலும், மருத்துவ குணம் கொண்ட இப்பழங்களை பொதுமக்கள் விலையை பொருட்படுத்தாமல் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர். விருதுநகர் மாவட்டம் தாதம்பட்டி, சின்ன மரனூத்து, பெரிய மரனூத்து மற்றும் இதன் சுற்றுப்பகுதி கிராமங்களில் கொடுக்காய் புளி பழங்கள் விளைச்சல் அமோகமாக உள்ளது. இங்கு விளையும் கொடுக்காய்புளிகள், கோவில்பட்டி நகரின் பல்வேறு பகுதிகளில் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. மார்க்கெட், எட்டயபுரம் ரோடு, கடலையூர் ரோடு, பசுவந்தனை ரோடு, மந்தித்தோப்பு ரோடு உள்ளிட்ட பெரும்பாலான சாலையோரங்களில் உள்ள கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது. விளைச்சல் அதிகரித்தாலும் விலை குறையவில்லை. கிலோ ரூ.200க்கு கொடுக்காய்புளி பழங்கள் பழக்கடைகள் மற்றும் சைக்கிள், தள்ளுவண்டிகளில் வைத்து விற்கப்படுகிறது. அதிக விலையை கூட பொருட்படுத்தாமல் கொடுக்காய்புளி பழங்களை பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி செல்கின்றனர். கோவில்பட்டி - எட்டயபுரம் மெயின்ரோட்டில் பழக்கடை வைத்திருக்கும் வியாபாரி கலிமுத்து கூறுகையில், 'எனது பழக்கடையில் அனைத்து பழவகைகளும் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு காலத்தில் கொடுக்காப்புளி மரங்களில் இருந்து உதிர்ந்து வீணாகியது. இதனை கால்நடைகள் மட்டுமே சாப்பிட்டு வந்தன. ஆனால் கொடுக்காய்புளி பழங்களை சாப்பிட்டு வந்தால் சர்க்கரை மற்றும் ரத்த அழுத்தம் குறையும் என்பது மட்டுமின்றி பல்வேறு நோய்களையும் தீர்க்கும் மருத்துவ குணம்

கொண்டவையாகும் என மருத்துவர்கள் கூறியதால் கொடுக்காய்புளி பழங்களுக்கு தற்போது மவுசு ஏற்பட்டுள்ளது. கிலோ ரூ.200க்கு விற்கப்பட்டாலும் பொதுமக்கள் விலையை பொருட்படுத்தாமல் விரும்பி வாங்கிசெல்கின்றனர்'என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**



நொய்யல், கரூர் மாவட்டம், முருகம்பாளையம் அருகே, கச்சியப்பன் காலனி பாரதி நகரில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. முகாமில் கால்நடை மருத்துவர் டாக்டர் கல்பனா கலந்து கொண்டு மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகள் போட்டார்.

இதில், சுற்று வட்டார பகுதிகளைச் சேர்ந்த 200–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டனர். இந்த முகாமில் கால்நடை ஆய்வாளர் நட ராஜன், கால்நடை பராமரிப்பு உதவியாளர் மீரா மற்றும் குழுவினர் கலந்து கொண்டு கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

**<u>நீர்வடிப்பகுதி திட்டப்பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் கலெக்டர் தட்சிணாமூர்த்தி உத்தரவு</u>**



நாமக்கல், சேந்தமங்கலம் பகுதியில் ரூ.1.19 கோடியில் நடைபெறும் நீர்வடிப்பகுதி திட்டப்பணிகளை விரைந்து முடிக்கவேண்டும் என்று கலெக்டர் தட்சிணாமூர்த்தி உத்தரவிட்டு உள்ளார்.

கலெக்டர்ஆய்வு

நாமக்கல் மாவட்ட வேளாண்மைத் துறையின் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின்கீழ் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தடுப்பணைகள், உலர்களங்கள், கதிரடிக்கும் களங்கள், தடுப்பணைகள், தடுப்புச்சுவர்கள், ஓடைகள் தூர்வாரும் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் ரூ.1.19கோடி மதிப்பில் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. நாமக்கல், சேந்தமங்கலம் வட்டாரங்களில் நடைபெற்றுவரும் இப்பணிகளை கலெக்டர் தட்சிணாமூர்த்தி ஆய்வுசெய்தார். நாமக்கல் வட்டாரத்தில் வள்ளிபுரம், ராசாம்பாளையம், தொட்டிபட்டி கிராமங்களிலும், சேந்தமங்கலம் வட்டாரத்திற்கு உட்பட்ட வாழவந்திகோம்பை கிராமத்திலும் ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு உள்ள தண்ணீர்தொட்டி, கதிரடிக்கும் களம், தடுப்பணைகள், தடுப்புச்சுவர்கள், ஓடைகள் தூர்வாரும் பணிகளையும் ஆய்வுசெய்த கலெக்டர்,விவசாயிகளின் பயன்பாட்டிற்கு பெரிதும் பயன்படுகின்ற இதுபோன்ற பணிகளை தரமாகவும், விரைந்தும் முடித்திட வேண்டுமென அலுவலர்களுக்கு

உத்தரவிட்டார்.

கதிரடிக்கும்களங்கள்

பின்னர் கலெக்டர் கூறியதாவது:- ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின்கீழ் நாமக்கல் மாவட்டத்தில் வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை, எருமப்பட்டி, மோகனூர், பரமத்தி, கபிலர்மலை, சேந்தமங்கலம், கொல்லிமலை மற்றும் நாமக்கல் ஆகிய வட்டாரங்களில் வேளாண் பெருமக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு பணிகளை மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டம் நாமக்கல் வட்டாரத்தில் 8 நீர்வடிப் பகுதிகளிலும், சேந்தமங்கலம் வட்டாரத்தில் 9 நீர்வடிப் பகுதிகளிலும் என 2 வட்டாரங்களில் மட்டும் 17 நீர்வடிப் பகுதிகளில் செயல்படுத்தப் படுகிறது. இதில் நாமக்கல் வட்டாரத்தில் நுழைவுமுகப்பு பணிகளுக்காக ரூ.23.40லட்சம் மதிப்பீட்டில் 13 கதிரடிக்கும் களங்களும், ரூ.6.12 லட்சம் மதிப்பீட்டில் 12 குடிநீர் தொட்டிகளும் அமைக்கப்பட்டு உள்ளது. மேலும், ரூ.31.94 லட்சம் மதிப்பீட்டில் நிலவள மற்றும் நீர்வள மேம்பாட்டு பணிகளான கல்வரப்பு அமைத்தல், தடுப்பணை அமைத்தல், தடுப்புச்சுவர் அமைத்தல், குட்டை தூர்வருதல், ஓடைதூர் வாருதல் மற்றும் பண்ணைக்குட்டை அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதைதொடர்ந்து இத்திட்டத்தின் கீழ் சேந்தமங்கலம் வட்டாரத்தில் மேற்கொள்ளப்பட்டு உள்ள நுழைவுமுகப்பு பணிகளுக்காக ரூ.10.75 லட்சம் மதிப்பீட்டில் 8 கதிரடிக்கும் களங்களும், ரூ.8.59 லட்சம் மதிப்பீட்டில் 18 குடிநீர்தொட்டி அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. மேலும், நிலவள மற்றும் நீர்வள மேம்பாட்டு பணிகளான கல்வரப்பு அமைத்தல், தடுப்பணை அமைத்தல், தடுப்புச்சுவர் அமைத்தல், குட்டை தூர்வருதல், ஓடை தூர்வாருதல் மற்றும் பண்ணைக்குட்டை அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.38.61 லட்சம் மதிப்பீட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாமக்கல், சேந்தமங்கலம் இரு வட்டாரங்களில் மட்டும் ஒருங்கிணைந்த

நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின்கீழ் ரூ.1.19கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார். ஆய்வின்போது திட்டஅலுவலர் வேளாண்மை இணைஇயக்குநர் கார்த்திகேயன், நடவுவல்லுநர் சுப்பிரமணியன், விரிவாக்க அலுவலர் ஆர்.சுப்ரமணியம், நாமக்கல் வேளாண்மை உதவிஇயக்குநர் மாயக்கண்ணன், சேந்தமங்கலம் வேளாண்மை உதவிஇயக்குநர் சண்முகம் மற்றும் நீர்வடிப்பகுதி வளர்ச்சி அணி உறுப்பினர்கள்உடன்சென்றனர்.

## விவசாயிகளின் முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டும் அமைச்சர் காமராஜ் பேச்சு



வேளாண்மை பட்டதாரிகள் விவசாயிகளின் முன்னேற்றத்துக்கு உழைக்க வேண்டும் என்று அமைச்சர் காமராஜ் கூறினார்.

சங்ககூட்டம்

வேளாண்மை அதிகாரிகளின் தமிழ்நாடு அரசு வேளாண்மை பட்டதாரிகள் சங்க மாநில, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடந்தது. கூட்டத்திற்கு சங்க மாநில தலைவர் முருகன் தலைமை தாங்கினார். திருவாரூர் மாவட்ட தலைவர் இளஞ்செழியன் வரவேற்றார். கூட்டத்தில் உணவு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் காமராஜ் கலந்து கொண்டு

பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- என்னுடைய குடும்பம் விவசாய குடும்பம் என்பதால் வேளாண்மை பட்டதாரியாக வேண்டும் என்கிற எண்ணம் எனக்கு இருந்தது. அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா டெல்டா விவசாயிகளின் வாழ்வு முன்னேற வேண்டும் என்கிற நோக்கத்தில் காவிரி நீருக்காக போராடினார். அதில் வெற்றியும் கண்டார். இதேபோன்று மதுரை, தேனி, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் பயன்பெற முல்லைபெரியாறு அணை நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்துவதற்கு நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்து வெற்றி கண்டார். எனவே ஜெயலலிதா காட்டிய வழியில் விவசாயிகளின் முன்னேற்றத்துக்கு வேளாண்மை பட்டதாரிகள் உழைக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

ஆய்வு

முன்னதாக ஜப்பான் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய எந்திரம் மூலம் விதை விடும் பணியின் செயல் விளக்க நிகழ்ச்சி நடந்தது. பணியை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். நிகழ்ச்சியில் கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ராஜேந்திரன், வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகணன், வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் சோழன், தஞ்சை சுற்றுச்சூழல் ஆய்வு மைய தலைவர் பழனியப்பன், மாநில செயலாளர் சையத்அலி, மாநில மகளிர் அணி இணை செயலாளர் கோமதிதங்கம், மாநில பொருளாளர் ஏழுமலை உள்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை திருவாரூர் மாவட்ட வேளாண்மை பட்டதாரிகள் சங்க செயலாளர் செல்வநாயகம், பொருளாளர் இந்திரஜித், இணை செயலாளர்கள் ஹேமா ஹெப்சிபாநிர்மலா, செண்பகம், சிவவீரபாண்டியன் ஆகியோர் செய்து இருந்தனர். முடிவில் மாநில இணை செயலாளர் மாரியப்பன் நன்றி கூறினார்.

## குட்டப்பாளையம் பகுதியில் வெண்டைக்காய் சாகுபடியில் ஆர்வம் காட்டும் விவசாயிகள்



குட்டப்பாளையம் பகுதியில் வெண்டைக்காய் சாகுபடியில் விவசாயிகள் அதிகஆர்வம்காட்டிவருகின்றனர்.

## நஞ்சை சம்பா நெல்

திருப்பூர் மாவட்டம் முத்தூர், நத்தக்காடையூர், குட்டப்பாளையம் சுற்றுவட்டார கிராம பகுதிகளில் ஆண்டு முழுவதும் விவசாய சாகுபடி பணிகள் மிகவும் பிரதான தொழில்களாக செய்யப்பட்டு வருகின்றன. இப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரமாக ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் அணை இருந்து வருகிறது. இந்த அணையில் இருந்து ஆண்டு தோறும் இரு பிரிவுகளாக திறந்து விடப்படும் தண்ணீரை பயன்படுத்தி இப்பகுதி விவசாயிகள் நஞ்சை சம்பா நெல் மற்றும் எண்ணெய்வித்து பயிர்கள் சாகுபடி செய்து பலன் அடைந்து வருகின்றனர். இந்த நிலையில் பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி பாசன பகுதிகளுக்கு கடந்த ஜனவரி மாதம் முதல் எண்ணெய்வித்து பயிர் சாகுபடிக்கு முறைத் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. இந்த தண்ணீரை பயன்படுத்தி இப்பகுதி விவசாயிகள் எள், மக்காசோளம், நிலக்கடலை, சூரியகாந்தி ஆகிய பயிர்களை சாகுபடி செய்துள்ளனர். இந்த நிலையில் குட்டப்பாளையம் சுற்றுவட்டார கிராம பகுதிகளில் கீழ்பவானி பாசன விவசாயிகள் தற்போது எண்ணெய்வித்து பயிர் சாகுபடிக்கு அடுத்த படியாக குறைந்த நீர் நிர்வாகத்தில் அதிக பலன் தரும் வெண்டை சாகுபடியில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதன்படி சுற்றுவட்டார விவசாயிகள் தங்களது வயல்களில் சுமார் 2 ஏக்கர் பரப்பளவு வரை வெண்டை சாகுபடி செய்துள்ளனர்.

## வெண்டை சாகுபடி

இதன்படி 1 ஏக்கர் வெண்டை சாகுபடி செய்வதற்கு உழவு கூலி, பார்கட்டுதல், அடி உரமிடுதல், விதை ஊன்றுதல், களைஎடுத்தல்,

உரநிர்வாகம், பயிர் பாதுகாப்பு பேணுதல் என ரூ. 10 ஆயிரம் முதல் ரூ.12 ஆயிரம் வரை முதலீடு செய்துள்ளனர். இந்த வெண்டை செடிகளில் தற்போது மஞ்சள் நிறத்தில் பூக்கள் பூத்து அயல் மகரந்த சேர்க்கை மூலம் வெண்டை பிஞ்சுகள் உருவாகி வெண்டை காய்களாக காய்த்துள்ளன. வெண்டை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்களது தோட்டத்தில் விளைந்துள்ள வெண்டை காய்களை அறுவடை செய்து முத்தூர், நத்தக்காடையூர், வெள்ளகோவில், காங்கயம், அரச்சலூர், சிவகிரி, கந்தசாமிபாளையம், ஆகிய பகுதிகளில் செயல்படும் வாரச்சந்தை மற்றும் தினசரி காய்கறி கடைகளுக்கு நேரில் கொண்டு சென்று விற்று பலன் அடைந்து வருகின்றனர். இப்பகுதிகளில் குறுகிய காலத்தில் குறைந்த நீர் நிர்வாகத்தில் அதிக மகசூல் தரும் வெண்டை காய்கள் சாகுபடி விவசாயிகளுக்கு கூடுதல் வருமானத்தை அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.